1973 நவம்பர் 20]

*248 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரத்திலுள்ள திருக்கண்மாலீஸ்வரர் கோவில் நிதியிலிருந்து கல்யாண மண்டபம் கட்டும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(இ) இத் திட்டம் நிறைவேற்றப்படுவதில், காலதாமதம் ஆவதற்கு உரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மற்றும் (இ): கிருஷ்ணராயபுரம், திருக்கண்மாலீஸ்வரர் திருக்கோயிலுள்ள நிதியிலிருந்து ரூ. 40,000 செலவில் ஒரு திருமண மண்டபம் கட்டும் திட்டம் உள்ளது. போதிய நிதி வசதி இல்லாததால் மண்டபம் கட்டும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஆகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அந்தக் கோவிலில் நிதி வசதி இல்லையானால் பக்கத்திலுள்ள கோவிலில் ஏராளமாக இருக்கின்ற நிதி வசதியைப் பயன்படுத்திக் கல்யாண மண்டபம் கட்டித் தரப்படுமா? நான் ஆணையரைக் கேட்டபோது அறநிலையத் துறையினரிடம் கொஞ்சம் பணம் கேட்டுப் பெறலாம் என்று சொன்னார். ஆகவே, இதை மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]